**கட்புலனற்றோர் புனர்வாழ்வளித்தல் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் - 2019**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

கட்புலனற்றோர் புனர்வாழ்வளித்தல் நம்பிக்கைப் பொறுப்பு 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதிக்கூற்றுக்கள் நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.
இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, நிருவாகம் தொடர்புபட்ட தரப்பினர்களினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் அவசியமானதாகும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கம் ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாக மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவனத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவனத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை

தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவனத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல் முகாமைத்துவத்தினை பொதுவான மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் அமுல்படுத்துதல் தொடர்புபட்ட அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்களி தன்மையினைப் பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் விசேடத்துவமான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மையினைப் பேணி சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியின் போது ஒப்பீடு செய்தல் மற்றும் வித்தியாசம் காணப்படுமாயிருந்தால் அவை சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் முதலியவற்றிற்காக நியாயமான உறுதிப்பாட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு போதியளவான ''சிறப்பாகத் திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமை நிறுவனத்தினால் பேணுதல் அத்தியாவசியமானதாகும்.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 544,920 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 989,505 ஆகும். அதற்கிணங்க, நிதி விளைவுகளில் ரூபா 444,585 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது அரசாங்கத்தின் மானியம் ரூபா 1,000,000 ஆல் அதிகரித்திருந்தும் கல்வி மற்றும் கலாச்சார உதவி ரூபா 3,178,786 ஆல் அதிகரித்தல் இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| (அ) புனர்வாழ்வளித்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பார்வையற்றோர் கருத்தரங்கின் மூலம் கட்புலனற்ற 15 நபர்களுக்கு ஆண்டின் போது பயிற்சியளிப்பதற்காக திட்டமிடப்பட்டிருந்தும் கட்புலனற்ற 4 நபர்களுக்கு மாத்திரம் பயிற்சி வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அப்பயிற்சிக்காக பயிற்சி உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய 6 நபர்களைக் கொண்ட பதவியணியினருக்கு இந்நிதியத்திலிருந்து படிகள் வழங்கப்பட்டிருந்தது. மேலும், முன்னைய 04 ஆண்டுகளில் இந்நிலைமை அவ்வாறே காணப்பட்டதுடன் பயிலுனர்களை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததுடன் பயிற்சி வழங்குவது சம்பந்தமாகக் காணப்பட்ட சிக்கல்கள் தொடர்பான ஒரு அறிக்கை மீளாய்வாண்டின் போது நிதியத்தின் தலைவருக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் அது சம்பந்தமாக மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இச் செயற்திட்டத்திற்காக தொடர்புபடுவதானது கடந்த காலங்களில் கட்புலனற்றமைக்கு உட்பட்ட நபர்களாகும். அவ்வாறான நபர்கள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றார்கள். அவ்வாறே கொழும்பிலிருந்து தூர பிரதேசத்தில் இருக்கின்ற சேவைநாடுனர்களுக்கு அவ்வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு வருகை தருவது சிரமமாகும். சேவை நாடுநர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தும் இதற்காக செலவு செய்யப்பட வேண்டியிருந்த ஆலோசகர் படிகளின் அளவு மாற்றமடையவில்லை. | பார்வையற்றோர் சேவை சபையுடன் தொடர்பு கொண்டு இப்பயிற்சி செயற்பாடுகளை அதிக நபர்களுக்கு பிரதிபலன்கள் கிடைக்கும் வகையில் பிரயோசனமான முறையில் திட்டமிட்டு பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிதியத்தின் நிதிஏற்பாட்டின் மூலம் இடம்பெறுகின்ற தொழில்சார் பயிற்சி நிறுவனத்தின் பயிலுனர் கட்புலனற்றவர்களுக்காக நடாத்தப்படுகின்ற கைத்தறி நெசவுக் கைத்தொழில் நலன்புரி நிலையத்தின் ஆலோசகரை நீக்கியதன் காரணமாக முன்னைய ஆண்டின் சனவரியிலிருந்து அந்த நிலையத்தின் உற்பத்தி நடவடிக்கைகள் முழுமையாக நிறுத்தப்பட்டிருந்தன. உற்பத்தி நடவடிக்கைகள் நிறுத்தப்படுவது சம்பந்தமான ஒரு அறிக்கையை நிருவாக சபைக்குச் சமர்ப்பிக்குமாறு நிறுவனத்தின் நிலையத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியிருந்தும் அவ்வாறான அறிக்கை 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதி வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அந்த நிலையத்தில் மிகுதியாகக் காணப்பட்ட ரூபா 48,250 தொகையான கைத்தறி மூலப்பொருட்கள் மற்றும் முன்னைய ஆண்டில் பூர்த்தி செய்த ரூபா 9,671 தொகையான கைத்தறி முடிவுப்பொருட்கள் ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலமாக பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கட்புலனற்ற மகளிர் நிலையம் தொடர்பாக நிறுவனத்தின் நிலையப் பொறுப்பு உத்தியோகத்தரினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை 2019-02-26 ஆந் திகதி நடைபெற்ற முகாமைத்துவக் குழுவிற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பயிற்சி ஆலோசகர் இல்லாமை மற்றும் உற்பத்தி நடவடிக்கைகளுக்காக கட்புலனற்ற மகளிரை தேடிக் கண்டுபிடிப்பதிலுள்ள சிக்கல் காரணமாக இதன் உற்பத்தி நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்தன. அவ்வாறே இந்த கட்புலனற்ற மகளிர் நிலையத்தை செயற்படுத்துவதில் மேலும் சிக்கல் ஏற்படுமாகயிருந்தால் அதனை கைவிட வேண்டுமென 2020-03-04 ஆந் திகதி நடைபெற்ற முகாமைத்துவ சபைக் கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டது. மிகுதியான மூலப் பொருட்களும் தற்காலிகமாக சீதுவ தொழில்சார் பயிற்சி நிறுவனத்தின் களஞ்சிய பொறுப்பாளரின் பொறுப்பில் காணப்படுகின்றன. | கட்புலனற்ற நபர்களுக்கு சேவைகளை வழங்குகின்ற ஒரு நிறுவனமாக அவர்களின் நலன்களையும் நலன்புரிகளையும் மேம்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். அதற்கிணங்க இப்பயிற்சி நிலையத்தை அதற்காக உச்ச அளவில் பயன்படுத்துவதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். மூன்றாம் நிலைப் பாடசாலைகள் மற்றும் பிரதேச செயலகங்களின் சமூக சேவை உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுப்பதன் மூலம் பயிலுனர்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். |
| (இ) | அதிகாரச் சட்டத்தின் குறிக்கோளாகக் காட்டப்பட்டுள்ள கட்புலனற்றவர்களுக்கு விஞ்ஞான ரீதியான கற்கை நெறிகளைத் தொடர்வதற்கு அல்லது தொழில்சார் பயிற்சிகளைப் பெற்றுக் கொள்வதற்கு முடியுமான வகையில் அவர்களுக்கு வீட்டு வசதிகளை | கட்புலனற்றோர்களை புனர்வாழ்வளிக்கும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு கிடைக்கின்ற நிதி ஏற்பாடு மட்டுப்படுத்தப்படுவதன் காரணமாக காட்டப்பட்டுள்ளவாறு வீட்டு வசதிகளை வழங்குதல் மட்டுப் | இந்த 02 குறிக்கோள்களும் கட்புலனற்றோர்களுக்கு மிகவும் முக்கியத்துவமானது என்பதனால் அக்குறிக்கோள்களை நடைமுறைப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழங்குதல் மற்றும் ஊனமுற்றவர்களால் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களுக்காக சந்தை வசதிகளை வழங்குதல் ஆகிய 02 குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | படுத்தப்பட்டுள்ள துடன் கட்புலனற்றோர்களால் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் சீதுவை தொழில்சார் பயிற்சி நிலையத்தில் பேணப்பட்டு வருகின்ற கிரியபொல வின் மூலம் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | 2003 யூன் 03 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரசாங்க தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் 4.2.2 ஆம் பிரிவின் பிரகாரம் நிருவாக சபைக் கூட்டங்கள் மாதாந்தம் நடாத்தப்பட வேண்டும் எனக் காட்டப்பட்டிருந்தும் நிதியத்தின் நடவடிக்கைகளைச் செயற்படுத்துவதற்கு அதன் நிருவாக சபை மீளாய்வாண்டில் நடாத்திய 07 கூட்டங்களின் போது கட்புலனற்றோர்களின் நலன்புரிக்குத் தேவையான தொடக்க குறிக்கோளை மேம்படுத்தும் நடைமுறை எதுவும் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | நிதியத்தின் தேவைப் பாட்டின் பிரகாரம் கூட்டங்கள் நடாத்துவதனை தீர்மானிப்பது கௌரவ தலைவரை உள்ளடக்கிய முகாமைத்துவ சபையினாலாகும். அதற்கிணங்க மாதாந்தம் கூட்டங்களை நடாத்துவதனை விட தேவைப்பாட்டின் பிரகாரம் கூட்டங்களை நடாத்துவது மிகவும் ஆக்கபூர்வமானதாகும். நிதியம் அல்லது அதன் மூலம் நிதி உதவியினைப் பெறுகின்ற கட்புலனற்றோர் அமைப்பு தொழில்முயற்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளாத சேவைகளை வழங்குகின்ற அமைப்பாகும். | நிதியத்தின் தொடக்க குறிக்கோளினை நிறைவேற்றுவதற்கு முடியுமான வகையில் நிருவாக சபை நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | கண்பார்வை இழந்த 05 நபர்களுக்கு கண் வில்லைகளை வழங்குவதற்கான ரூபா 100,000 நிதிஏற்பாட்டில் 04 நபர்களுக்கு ரூபா 53,800 செலவு செய்து கண் வில்லைகளை வழங்கி ரூபா 46,200 மிகுதியாகக் காணப்பட்டது. அவ்வாறே கண் வில்லைகளை வழங்குவதற்காக முறையான நடைமுறை தயாரிக்காததன் காரணமாக நிதிஏற்பாட்டுப் பணத்தை உச்ச அளவில் பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | அரசாங்க வைத்திய சாலைகளின் மூலமும் ஏனைய தன்னார்வ அமைப்புக்களின் மூலமும் இலவசமாக கண் வில்லைகளை வழங்கும் நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துவதனால் அதற்காக நிதியத்திற்கு கிடைக்கின்ற வேண்டுகோள் குறைவடைந்துள்ளது. கிடைக்கின்ற வேண்டுதல்களுக்கு இணங்க 2019 ஆம் ஆண்டில் நிதியத்தின் மூலம் நான்கு கண் வில்லைகள் வழங்கப்பட்டுள்ளன. | கட்புலனற்றவர்களுக்கு வழங்கப்படுகின்ற சேவை என்பனதனால் போதியளவு பிரசித்தப்படுத்தலை வழங்கும் வேலைத்திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். |